

விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து விக்கிரவாண்டி பேரூராட்சி, பாகம் 227 பகுதிகளில் அமைச்சரும் மாவட்டச் செயலாளருமான பி.கே.சேகர்பாபு வீடு வீடாகச் சென்று தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். உடன் மாநில செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, எழும்பூர் பகுதி செயலாளர்கள் சொ.வேலு, வி.சுதாகர், விழுப்புரம் நகர செயலாளர் சக்கரை, பேரூராட்சி மன்ற உறுப்பினர் ஜி.ரமேஷ், பகுதி நிர்வாகிகள் தில்லைகுமார், ஜெ.கே.கருணாகரன், து.களரிமுத்து, இ.மொய்தீன், எஸ். சுரேஷ்பாபு, வழக்கறிஞர் குமாரவேல், ஐடி விங் முனீஷ்குமார், இம்ரான் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஆகியோர் உடனிருந்தனர்.



விக்கிரவாண்டி தொகுதி சட்டமன்ற இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து காணை ஒன்றியம் கருங்காலிப்பட்டி ஊராட்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் திறந்த ஜீப்பில் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரித்தனர். உடன் விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் லட்சுமணன், திருப்பூர் தெற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் தலைமைக்கழகப் பேச்சாளர் எழும்பூர் மோ.கோபி உள்ளனர்.

### ஜார்க்கண்ட் முதலமைச்சராக

# ஹேமந்த் சோரன் மீண்டும் பதவியேற்றார்!



ராஞ்சி,ஜூலை.5-

அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்ட ஹேமந்த் சோரன் ராஞ்சியின், பிர்சா முண்டா சிறையில் அடைக்கப்பட்டார். ஜாமீன் கேட்டு ஹேமந்த் சோரன் தாக்கல் செய்த மனுவை சிறப்பு நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இதையடுத்து ஜாமீன் கேட்டு ஜார்க்கண்ட் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். இந்த வழக்கை கடந்த 28ம் தேதி விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதி ரோங்கன் முகோபாத்யாய, ஹேமந்த் சோரனுக்கு ஜாமீன் வழங்கி உத்தரவிட்டார். இதையடுத்து சிறையில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டார். சம்பாய் சோரன் வீட்டில் ஜேஎம்எம் மற்றும் கூட்டணி கட்சி எம் எல்ஏக்கள் கூட்டம் நேற்று நடந்தது.

இந்த கூட்டத்தில் ஜேஎம் எம் கட்சியின் சட்டப்பேரவை தலைவராக ஹேமந்த் சோரனை தேர்வு செய்வது என ஒருமனதாக முடிவு செய்யப்பட்டதாக கட்சி தலைவர்கள் தெரிவித்தனர். இந்த நிலையில், நேற்று மாலையில் மாநில ஆளுநர் சி.பி.ராதாகிருஷ்ணனை சம்பாய் சோரன் சந்தித்து ராஜினாமா கடிதத்தை கொடுத்தார். இதையடுத்து, உடனடியாக ஆட்சியமைக்க ஆளுநரிடம் ஹேமந்த் சோரன் உரிமை கோரினார். இதைத் தொடர்ந்து ஹேமந்த் சோரன் ஆட்சி அமைக்க ஆளுநர் ராதாகிருஷ்ணன் அழைப்பு விடுத்தார்.

இந்த நிலையில், ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற விழாவில் ஹேமந்த் சோரனுக்கு முதலமைச்சராக ஆளுநர் சி.பி.ராதாகிருஷ்ணன் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

### விக்கிரவாண்டி இடைத்தேர்தல்:

# பா.ஜ.க. கூட்டணிக்கு எந்தக் கொள்கையும் கிடையாது!

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் முத்தரசன் பேச்சு!



விழுப்புரம், ஜூலை 5 -

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கு இடைத்தேர்தல் வரும் 10ஆம்தேதி நடைபெறுகிறது.

இதில் தி.மு.க. சார்பில் அன்னியூர் சிவா போட்டியிடுகிறார். இவருக்கு ஆதரவாக விக்கிரவாண்டி தெற்கு ஒன்றியத்தில் உள்ள பல்வேறு ஊராட்சிகளில் தி.மு.க.வினர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் விக்கிரவாண்டி தெற்கு ஒன்றியம் நேமூர் கூட்டு சாலையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் முத்தரசன்,சிறு குறு மற்றும் தொழில் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், வணிகவரி மற்றும் பத்திர பதி துறை அமைச்சர் மூர்த்தி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆகியோர் வாக்காளர்களை சந்தித்துஉதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் முத்தரசன் பேசுகையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் மக்கள் நலன் சார்ந்த பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்.

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளுக்கு காலை சிற்றுண்டி திட்டம்,

கல்லூரி படிக்கும் பெண்களுக்கு புதுமைப்பெண் திட்டம் மூலம் மாதம் ஆயிரம் ரூபாய், தமிழ் புதல்வன் திட்டத்தில் உயர் கல்வி படிக்கும் மாணவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய், மகளிர் உரிமை திட்டத்தின் மூலம் பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு வாய்ந்த பெண்கள் நலன் சார்ந்த திட்டங்களை முதல மைச்சர் செயல்படுத்தி வருகிறார்.

பிரதான கட்சி என்றும் செல்வாக்கு மிக்க கட்சி என்றும் அதிகமான கோடிக்கணக்கான உறுப்பினர்கள் கொண்ட கட்சி என்றும் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியாக உள்ள கட்சி என்று சொல்லும் அ.தி.மு.க.வினர் விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தலில் ஏன் போட்டி இடவில்லை என கேள்வி எழுப்பிய முத்தரசன் பா.ஜ.க. அதிமுக கள்ளக் கூட்டணி என்றும் அதை நிரூபிக்கும் வகையில் இப்போது விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் இருந்து அ.தி.மு.க. விலகி உள்ளதாக குற்றம் சாட்டினார்.

தொடர்ந்து பேசிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் முத்தரசன், அ.தி.மு.க. கட்சியை பிளவு படுத்தியவர் மோடி என்றும் தர்மயுத்தம் செய்ய சொன்னவர் மோடி ஓ பன்னீர் செல்வத்தை அ.தி.மு.க. வுடன் இணைத்து அவருக்கு ஒருங்கிணைப்பாளர் துணை முதல்வர் போன்ற பொறுப்புகளை வழங்க சொன்னவர் பிரதமர் மோடி ஆக அ.தி.மு.க. கட்சியை பிளவு படுத்தி சின்னா பின்னமாக ஆக்கிக்கொண்டு இருப்பவர் பிரதமர் மோடி, பா.ஜ.க. கட்சி என்றும் விமர்சித்தார்.

தற்போது விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் பிஜேபியின் ஆட்சியோடு ஒரு கட்சி நிற்கிறது.

பா.ஜ.க., பா.ம.க. கூட்டணி எலியும் தவளையுமான கூட்டணி என்றும் எந்தக் கொள்கையும் அக்கட்சிக்கு கிடையாது என்றும் சந்தர்ப்பவாத கூட்டணி என்றும் தேர்தல் வரும் சமயத்தில் தான் பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் கூட்டணி குறித்து பேசுவார் என கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில பொது செயலாளர் முத்தரசன் குற்றம் சாட்டினார்

வாக்கு சேகரிப்பின் போது பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் கருணாநிதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் புஷ்பராஜ், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, ஒன்றிய செயலாளர் வேம்பி ரவி உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### விக்கிரவாண்டி தொகுதியில் அன்னியூர் சிவாவை ஆதரித்து

# புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழகத்தினர் தீவிர வாக்குச் சேகரிப்பு!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் - மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் பங்கேற்பு!

புதுக்கோட்டை, ஜூலை 5-

நடைபெறவிருக்கும் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில்,கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து, புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளபனப்பாக்கம்,தொரவி பனப்பாக்கம் (பாகம் எண் 225,226) பகுதிகளில், சட்டத்துறை அமைச்சர், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர், வழக்கறிஞர் கே.கே. செல்லப்பாண்டியன் ஆகியோர் கழக நிர்வாகிகளுடன் வீடு வீடாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குச்சேகரிப்பில் ஈடுபட்டனர்.

இந்நிகழ்வில், தலைமை இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக பொருளாளர் எம்.லியாகத் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சுப. சரவணன், மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.எஸ். கருப்பையா, பொதுக்குழு உறுப்பினர்கள் என்.சாத்தையா, எட்வர்டு சந்தோஷ், ஒன்றிய கழகச் செயலாளர்கள் எம்.பரமசிவம், தவ பாஞ்சாலன், மு.பி.ம. சத்தியசீலன், சி சண்முகம், கேபி. ஐயப்பன், ஆர். ஆர்.சாமிநாதன் மற்றும் வி.ஜி.ஆர். மணிவண்ணன், எஸ். வி.ஆர். ஸ்டாலின், விளாப்பட்டி சிவா, ஆ.மரிய எட்வின், தமிழினியன்,தேவராஜ், முத்தழகு, சந்தானம், விராலிமலை நாகராஜ், ஒன்றிய கவுன்சிலர் அன்பு, கோகுல், சதீஷ், சுரேஷ், ராஜேஷ் உள்ளிட்ட புதுக்கோட்டை வடக்கு மாவட்ட நிர்வாகிகளும், ஜோதி பெருமாள், பரந்தாமன், பழனி, ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கபிலன், மகளிர் அணி அம்சா, தனசேகர், தகவல் தொழில்நுட்ப அணி பிரித்திவ்ணன், அய்யனார், பாண்டியன், ராஜேஷ், மணிகண்டன் மந்திரசேகர், மகளிரணி ராதிகா, சுதா,வானூர் ஒன்றிய நிர்வாகிகள் வானூர் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் முரளி, வாசு, ராஜேஷ், பிரம்மன், வீரராகவன், சதீஷ் உள்ளிட்ட உள்ளூர் நிர்வாகிகளும், திரளாக கலந்து கொண்டனர்.



பொதுப்பணித்துறை நெடுஞ்சாலைத்துறை அமைச்சரும் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி காணை வடக்கு ஒன்றிய தேர்தல் பொறுப்பாளருமான எ.வ.வேலு வழிகாட்டுதலின்படி., கழக மருத்துவரணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி நங்காத்தூர் ஊராட்சியில் பொதுமக்களிடம் வேட்பாளர் அன்னியூர் சிவா அவர்களை ஆதரித்து வாக்கு சேகரித்தார்.

### தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினால் தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட

# நீட் தேர்வு விலக்கு தீர்மானத்திற்கு ஒப்புதல் வழங்கிட வேண்டும்!

## மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. பேச்சு!



நாமக்கல் ஜூலை 5-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட நீட் தேர்வு விலக்கு தீர்மானத்திற்கு ஒப்புதல் வழங்கிட வேண்டும் என மாநிலங்களவையில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டமத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே. ஆர்.என்.இராஜேஸ்குமார் வலியுறுத்தி பேசினார்.

நாடாளுமன்ற மாநிலங்களவையில் குடியரசுத் தலைவர் உரை மீதான நன்றி தெரிவித்து கே.ஆர். என்.இராஜேஸ்குமார் எம். பி பேசும் போது, குடியரசு தலைவர் உரை மீது நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தில் பேசுகின்ற வாய்ப்பளித்த கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், மாநில இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், நாடாளுமன்ற குழு தலைவர் திருச்சி சிவா அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநிலங்களவையில் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தை சேர்ந்த சக உறுப்பினர்கள், நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 40 தொகுதிகளில் 40 க்கு 40க்கு இந்திய கூட்டணியின் வேட்பாளர்கள் ஒரு வரலாற்றுச் சாதனையாக வெற்றி பெற்றுள்ளதை இங்கு குறிப்பிட்டு பேசினார்கள். இந்த மாபெரும் வரலாற்று வெற்றிக்கு இந்திய கூட்டணியை வெற்றி பெற வைத்த பெருமை தமிழ்நாட்டில் தலைமை ஏற்று வெற்றிக்கு அரும்பாடுபட்ட கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களையே சாரும். தமிழ்நாட்டு மக்கள் மூன்றாம் கால திராவிட முன்னேற்ற தி.மு.க. ஆட்சிக்கு வழங்கிய அங்கீகாரமாக இந்த வெற்றியை கருதுகிறோம்.

தமிழ்நாட்டில் மூன்றாண்டு கால தி.மு.க. ஆட்சியில் ஏழை எளிய நடுத்தர மக்களுக்கு ஏராளமான திட்டங்களை வழங்கியது தான். அதற்காக மக்கள் தி.மு.க. கூட்டணிக்கு வெற்றி அளித்துள்ளனர்.

அதில் ஒன்று இரண்டு திட்டங்களை இந்த அவையில்வைக்கவிரும்புகிறேன். ஏழை எளிய கிராமப்புற மாணவர்கள் பசியோடு பள்ளிக்கு செல்லக் கூடாது என்று நோக்கில் இந்தியாவே திரும்பிப் பார்க்கிற வகையில் மற்ற மாநிலங்களும் பின்பற்றக் கூடிய வகையில் அரசு பள்ளிகளிலே ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம் வழங்கி அதனை தமிழ்நாடு முதல்வர் அவர்கள் சிறப்பாக நடத்தி வருகிறார். அதுமட்டுமில்லாமல் நான் முதல்வன் திட்டம். இந்தியாவின் எதிர்காலம் என்று சொல்லக்கூடிய இளைஞர்களின் திறனை மேம்படுத்தும் வகையில் மாநில அரசாங்கம் அளிக்கின்ற நிதி உதவி திட்டம் ஆகும்.

போட்டித் தேர்வு தயார் செய்யக்கூடிய மாணவர்களுக்கு நான் முதல்வன் திட்டம் மூலமாக நிதி வழங்கப்பட்டு வருகிறது. சமீபத்தில் யுபிஎஸ்சி தேர்வு முடிவுகள் வெளிவந்தது அதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 42 பேர் வெற்றி பெற்றுள்ளனர். முதன்மை தேர்வுக்கு தேர்வு செய்யப்பட்டவர்கள் 45 பேர். அந்த 45 பேரில் 37 பேர் நான் முதல்வன் திட்டத்தின் மூலமாக நிதி உதவி பெற்று படித்தவர்கள்.

அதில் மாநிலத்தில் இரண்டாவது இடமாக வந்த வினோதினி என்ற மாணவி இந்து பத்திரிக்கைக்கு அளித்த பேட்டியில் பொருளாதார நெருக்கடியில் எனக்கு நான் முதல்வன் திட்டம் மூலமாகத்தான் எனக்கு இந்த வெற்றி கிடைத்தது என்று கூறியுள்ளார்.

நீட் தேர்வை பொருத்தவரை ஆரம்பகாலம் முதலே திராவிட முன்னேற்ற கழகம் எதிர்த்து வருகிறது. நீட் தேர்வின் பாதிப்பால் தமிழ்நாட்டில் மாணவி அனிதா தொடங்கி சதீஷ்குமார் வரை, மாணவ, மாணவிகள் 22 பேர் தங்கள் இன்னுயிரை நீத்துள்ளனர். நீட் தேர்வால் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் நீட் தேர்வு விலக்கு என்பது தான் எங்கள் இலக்கு என்று கூறிஇளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் மாபெரும் மக்கள் இயக்கத்தை தொடங்கினார். தமிழ்நாட்டில் நீட் தேர்வுக்கு எதிரான கையெழுத்து இயக்கத்தை தொடங்கினார். சென்ற ஆண்டு அக்டோபர் மாதம் 50 நாட்கள் இலக்கு வைத்து இந்த கையெழுத்து இயக்கத்தை தொடங்கினார் 50 நாளில் 50 லட்சம் கையெழுத்து பெற வேண்டும் என குறிக்கோளாக வைத்திருந்தனர் ஆனால் தமிழ்நாட்டில் இந்த மாபெரும் கையெழுத்து இயக்கத்திற்கு ஆதரவாக ஒரு கோடியே 10 லட்சம் பேர் நீட் தேர்வுக்கு எதிராக கையெழுத்தை இட்டுள்ளனர். இந்த நீட் தேர்வால் யார் பயன் பெறுகிறார்கள் என்றால் பயிற்சி மையங்கள் வைத்து நடத்தக்கூடியவர்கள் தான் பயன் பெற்று வருகிறார்கள். ஒவ்வொரு மாணவரும் நீட் தேர்வு பயிற்சிக்கு செல்ல வேண்டும் என்றால் ஆண்டு ஒன்றுக்கு 4 லட்சம் முதல் 5 லட்சம் வரை கட்டணமாக செலுத்தக்கூடிய நிலை உள்ளது. ஆகையால் தான் கிராமப்புற மாணவர்கள் அரசு பள்ளி மாணவர்கள் நீட் தேர்வால் பாதிக்கப்படுகிறார்கள் என்ற உயர்ந்த எண்ணத்தில் தான் நீட் தேர்வு விலக்கு வேண்டும் என்று தி.மு.க. சார்பில் தொடர்ச்சியாக போராடி வருகிறோம். அதன் ஒரு கட்டமாக தான் நாடு முழுவதும் போராட்டங்கள் நடைபெற்று வருகிறது. சமீபத்தில் கூட சட்டமன்றத்தில் நீட் தேர்வுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என ஒட்டுமொத்தமான சட்டமன்றத்தினுடைய தீர்மானத்தை நிறைவேற்றி ஒன்றிய அரசாங்கத்திற்கு அனுப்பி உள்ளார்கள். அதற்கு ஒன்றிய அரசாங்கம் நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளிக்க வேண்டும் இந்த அவையின் வாயிலாக ஒன்றிய அரசை கேட்டுக் கொள்கிறேன் என மாநிலங்களவையில் உரையாற்றினார்.

### கோவையில் மெட்ரோ ரயில் திட்டப் பணிகள்:

# ஆசிய முதலீட்டு வங்கி அதிகாரிகள் ஆய்வு!

கோவை, ஜூலை 5 -

கோவையில் மெட்ரோ ரயில் திட்டப் பணிகள் குறித்து ஆசிய முதலீட்டு வங்கி அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

சென்னை மெட்ரோ ரயில் சேவையைத் தொடர்ந்து கோவை, மதுரை ஆகிய நகரங்களில் மெட்ரோ ரயில் சேவையைத் தொடங்க தமிழக அரசு தயாராகி வருகிறது.

அந்த வகையில் மதுரை திருமங்கலம் மற்றும் ஒத்தக்கடை பகுதிகளை இணைக்கும் வகையில் ரூ.11,368 கோடியிலும், கோவை அவிநாசி சாலை மற்றும் சத்தியமங்கலம்சாலைவழித்தடங்களில் மெட்ரோ ரயில் திட்டத்துக்கு ரூ.10,740 கோடியிலும் விரிவான திட்டஅறிக்கைகள்ஒன்றிய அரசின் மூலதனப் பங்களிப்புபெறுவதற்காகசமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஒன்றியஅரசின்அனுமதி கிடைத்த உடன் மெட்ரோ ரயில் திட்ட பணிகள் தொடங்கப்பட உள்ளன. மதுரை மற்றும் கோயம்புத்தூர் திட்டங்களுக்கு நிதியுதவி செய்வதில் ஆசிய உள் கட்டமைப்பு முதலீட்டு வங்கி விருப்பம் தெரிவித்ததுடன், சென்னைமெட்ரோ ரயில் நிறுவனத்தின் குழுவுடன் இணைந்து மதுரையில் நேற்று முன்தினம், முதற்கட்ட ஆய்வைமேற்கொண்டது. இதனைத் தொடர்ந்து நேற்று கோயம்புத்தூரிலும் ஆய்வுமேற்கொண்டது.உக்கடம்பேருந்துநிலையத்தில் மெட்ரோ ரயில் பணிகளுக்காகஅதிகாரிகள்ஆய்வுசெய்தனர்.கோவையில்உக்கடம் முதல் கோவை விமான நிலையம் வரை 20.4 கி.மீ. தொலைவுக்கு மெட்ரோ ரயில் அமைகிறது.



விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி காணை தெற்கு ஒன்றியம் காங்கியனூர் ஊராட்சியில் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழக அவைத்தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.கழகமாவட்ட செயலாளர் டி.ஜெ. கோவிந்தராஜன் எம்.எல்.ஏ பூத் எண் 76 மற்றும் 77 வாக்குச்சாவடிகளில் தேர்தல் பணி குறித்து ஆலோசனைகளை வழங்கினார். உடன் இ.ஏ.பி.சிவாஜி மு.கதிரவன் எம்.எல்.ரவி எஸ்.ரமேஷ் சி.எச்.சேகர் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம் ஜி.ஸ்டாலின் கே.சுப்பரமணி, மு.மணிபாலன், டி.கே.சந்திரசேகர் நா.செல்வசேகரன் பொன்னுசாமி(எ)ஜான் இரா.அறிவழகன் பி.முத்து க.சு. தமிழ்உதயன் கே.வி.லோகேஷ், எம்.முரளிதரன், டி.சங்கர், இரா.கதிரவன், செ.யுவராஜ், மு. பாஸ்கர், ஜி.பி.வெங்கடேசன், பழவைஅலவிமுகமது, கா.சம்பத், ப.தனசேகர், ஏ.கே.சம்பத், எம்.ஆர்.ஸ்ரீதர், கே.ராஜேஷ், கோல்டுடி.மணி, ராமஜெயம், கேசவன், ருக்குமணி மோகன்ராஜ், கரீம்பாய், பரத்குமார்,பூமிநாதன், பூபாலன், டில்லிசங்கர், ராஜதுரை(எ)ராபர்ட் வெங்டேசன், கருணாகரன், மெய்யழகன், அப்புன் தமிழ்சாதிக், சாண்டிலியன், கௌதம், குமார். தேவா, ஆனதராஜ், நேதாஜி, சிவாசங்கர், சீனிவாசலு, ராகவன், தமின்ஷா, அசோகன், நாகபூஷ்ணம், டி.ஆர்வாசு, ஆரணிரமேஷ், டி.கே.ராஜா, பிரதாப், மணிமாறன். முகிலன், பார்த்திபன், ஹரி, திருப்பதி, ஹரிஹரன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.